
பக்கங்கள் 15

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 26 வெள்ளிக்கிழமை 13.10.2023 அதிர்வு 74

## உலக அமைதியின் எதிர்காலமே கேள்வி

### சிறீகாந்தா கவலை



மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கும், ஹமாஸ் இயக்கத்துக்கும் இடையில் நிகழ்ந்து கொண்டிருக்கும் போரினால் 04

## கிளிநொச்சி வீதி விபத்தில் இளைஞர் பலி




கிளிநொச்சி, கோணாவில் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 05

## தமிழரசின் முன்னாள் எம்.பி. செல்வராசா காலமானார்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பொன். செல்வராசா (வயது 77) சுகயீனம் காரணமாக இன்று காலமானார்.

பட்டிருப்புத் தொகுதியில் பெரிய கல்லாற்றைப் பிறப்பிடமாகவும், கோட்டைக்கல்லாற்றை மணவாழ்க்கையாகவும் கொண்ட பொன். செல்வராசா, இலக்கம் 68, புகையிரத நிலைய வீதி, மட்டக்களப்பில் வசித்து வந்தார்.



ஆசிரியராகவும் அதன் பின்னர் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் பணியாற்றிய அவர், முதல் தடவையாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் 04

### குபேரர்களுக்குக் குடிசை மக்களின் துன்பம் தெரியாது

# ஹர்த்தால் அறிவிப்பை உடன் மீளப் பெறுங்கள்!

### மறவன்புலவு சச்சிதானந்தன் கோரிக்கை



வடக்கு, கிழக்கில் எதிர்வரும் 20ஆம் திகதி பொது முடக்கத்துக்கு விடுக்கப்பட்டுள்ள அறிவித்தலை உடனடியாக மீளப் பெறுமாறு கோரியுள்ளார் இலங்கை சிவசேனையின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் இன்று அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“குபேரர்களுக்குக் குடிசை மக்களின் துன்பம் தெரியாது. பொது முடக்கத்துக்கு அழைத்த அரசியல்வாதிகளுள் பலர் குபேரர்கள். வசதிகளின் மடியில் வாழ்பவர்கள். சொகுசுகளின் சொப்பனத்தில் மகிழ்பவர்கள். உதவியாளர்களின் ஒத்துழைப்பில் திளைப்பவர்கள் பலர். மக்களின் வரிப்பணத்தை உறிஞ்சுவோர் சிலர்.


இன்று உழைத்தால் நாளைய கஞ்சி. இன்றைய சம்பளம் நாளைய தீபாவளிக்கு. ஈழத் தமிழர் தாயகத்தின் உழைக்கும் தொழிலாளர் 3 இலட்சம் தமிழரின் நிலை. 04



## பிரிட்டனில் சவேந்திர சில்வாவை தடை செய்யத் தொடரும் சந்திப்பு

### ஜோன் பென்றோஸ், ஜாக் ப்ரெட்டன் எம்.பிக்களுடன் பேச்சு

இலங்கை பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட யுத்தக் குற்றவாளிகளை பிரித்தானியாவின் உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான தடைவிதிப்பு அதிகார சபையின் கீழ் தடை செய்வதற்கு பிரித்தானிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி, மேலும் இருமுக்கிய இராஜதந்திர சந்திப்புக்கள் இடம்பெற்றுள்ளன.




பிரித்தானியாவின் வெஸ்டன் சூப்பர் மேர் பகுதி நாடாளுமன்ற 05

# தேர்தல்களை நடத்துமாறு கோரி போராட வேண்டிய நிலைமை!

## விமல் வீரவன்ஸ எம்.பி. தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப் பிற்போட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றைப் பிற்போடுவது கடினமானதல்ல. எதிர்வரும் ஆண்டு ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறுவது சந்தேகத்துக்குரியது. தேர்தலுக்காகவும் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய நிலை தோற்றம் பெற்றுள்ளது.

இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஷ தெரிவித்துள்ளார்.

பொரளையில் உள்ள இலங்கை கம்யூனிச கட்சி அலுவலகத்தில் நேற்று (12) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

பொருளாதாரப் பாதிப்புக்குத் தீர்வு காண்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்ரசிங்க உலகத்தை வலம் வருகிறார்.

ஆனால் பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வு எட்டப்படவில்லை. பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மென்மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் அரசு தீர்மானங்களை முன்னெடுக்கிறது.

சர்வதேச நாணய நிபந்தனைக்கு அமைய வரி உட்பட அத்தியாவசிய சேவைக் கட்டணங்கள் உயர்வடைந்துள்ளன. மின்கட்டணம் முறையற்ற வகையில் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் மின்கட்டணத்தை அதிகரிக்க மின்சார சபை இலங்கை



பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவிடம் யோசனை முன்வைத்துள்ளது.

மின்சார சபை எதிர்கொள்ளும் நட்டத்தை முகாமைத்துவம் செய்து கொள்வதற்காகவே மின்கட்டணம் முறையற்ற வகையில் அதிகரிக்கப்படுகிறது. மின்சார சபையின் ஊழல் மற்றும் வீண் செலவுகளை கட்டுப்படுத்தினால் முறையற்ற மின்கட்டண அதிகரிப்பை தடுக்கலாம்.

தேர்தல் ஊடாகவே ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த முடியும். இதனால்தான் காலத்துக்கு காலம் தேர்தல் நடத்தப்படுகிறது.

நாட்டு மக்கள் போராட்டத்தின் ஊடாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

அதுவும் தற்போது ஸ்திரமற்றதாகவே காணப்படுகிறது. மக்களின் தேர்தல் உரிமையும் பறிக்கப்பட்டுள்ளது. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் தேர்தல் முறைமையை திருத்தியமைக்கும் வகையில் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தேர்தலைப் பிற்போடுவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறமையானவர். பெண் பிரதிநித்துவத்தை அதிகரிப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மாகாண சபைத் தேர்தல் முறைமையைத் திருத்தம் செய்தார்.

இறுதியில் மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர் எண்ணிக்கையை வரையறை செய்வதாக குறிப்பிட்டுக் கொண்டு எல்லை நிர்ணயம் புதிதாக வகுக்கப்பட்டது.

தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் தேர்தல் முறைமையை திருத்தம் செய்யும் வகையில் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றை பிற்போடுவது கடினமானதல்ல.

ஆகவே எதிர்வரும் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறுவது சந்தேகத்துக்கு உரியதே.

தேர்தலுக்காகவும் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய நிலை தோற்றம் பெற்றுள்ளது. பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் உறுப்பினர்களின் நாடாளுமன்ற உறுப்புரிமைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. எமக்கு எதிராக பொதுஜன பெரமுனவால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது.–என்றார்.

# அனைத்து வாகனங்களையும் இறக்குமதி செய்ய நடவடிக்கை

## வர்த்தக அமைச்சர் நளீன் பெர்னாண்டோ தெரிவிப்பு

அனைத்து வாகனங்களையும் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குவதற்கான கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன என்று வர்த்தக அமைச்சர் நளீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

உரிய கொள்கைகளை அமைச்சரவையில் முன்வைத்ததன் பின்னர் வாகன இறக்குமதி தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட வர்த்தக அமைச்சர் நளீன் பெர்னாண்டோ இதனை தெரிவித்துள்ளார்.

வாகன இறக்குமதி தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக அமைச்சரவையில் இது பற்றிய விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

சமீபத்தில் பொது போக்குவரத்து, சுற்றுலா போன்றவற்றுக்குத் தேவையான வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிப்பதாக கூறினர்.



அதற்குத் தேவையான வேலைத் திட்டங்களும் இடம்பெற்று வருகின்றன என்று மேலும் தெரிவித்துள்ளார்.

# கண் சிகிச்சை வில்லை: தட்டுப்பாடுகள் நீங்கின!

## ஐந்து கோடி ரூபா மதிப்புள்ள கண் வில்லைகளைப் பிரித்தானியா வழங்கியது

கண் சத்திரசிகிச்சைக்கான வில்லைகளுக்கு இப்போது தட்டுப்பாடு இல்லை என்று தேசிய கண் வைத்திய சாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சிந்தக படவல தெரிவித்துள்ளார்.

கண் வில்லை தட்டுப்பாட்டால் இது வரை கண் வில்லை சத்திரசிகிச்சைகள் நிறுத்தப்படவில்லை எனவும் வலியுறுத்திய அவர் தற்போது, ஐந்து கோடி ரூபா மதிப்புள்ள 5000 கண் வில்லைகள் பிரித்தானியாவில் இருந்து இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

நேற்று (12) உலக பார்வை தினத்தை முன்னிட்டு தேசிய கண் வைத்திய



சாலையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பணியிடத்தில் ஏற்படும் கண் விபத்துகளை குறைப்பது என்பதை தொனிப் பொருளாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் இந்த ஆண்டுக்கான தேசிய பார்வை தினத்தில் நமது நாட்டுக்கு நன்கொடையாக கண்வில்லைகள் கிடைத்துள்ளன. இந்த மகிழ்வான செய்தியைப் பகிர்வது மகிழ்ச்சியளிக்கிறது.

சராசரியாக மாதமொன்றுக்கு சுமார் 900 கண் வில்லை சத்திர சிகிச்சைகள் செய்யப்படுகின்றன.

இந்த நிலையில் பிரித்தானியாவிடம் இருந்து கிடைத்த வில்லைகள் பேருதவியாக உள்ளன.

அதுமாத்திரமல்லாமல், பிரித்தானியாவிடம் இருந்து நன்கொடையாக பெறப்பட்ட கண் வில்லைகள் சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சால் நன்கொடையாக பெறப்பட்ட இந்தக் கண் வில்லைகள் சத்திரசிகிச்சைகளுக்குப் பயன்படுத்தப்படும் என்று மேலும் குறிப்பிட்டார்.

## புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றமுடியாது போனால்

# அனர்த்த முகாமைத்துவ நிலையங்களில் உடன் அறியப்படுத்துமாறு அறிவுறுத்து!

புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகப் பரீட்சை நிலையங்களுக்குச் செல்ல முடியாத மாணவர்கள், அந்தந்தப் பகுதிகளில் உள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையங்களுக்கு அறியப்படுத்துமாறு பரீட்சைத் திணைக் களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு பரீட்சை திணைக்களம் விடுத்துள்ள முக்கிய அறிவித்தலில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பரீட்சை ஆணையாளர் எச்.ஜே. எம்.சி ஜயசுந்தர விடுத்துள்ள அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஆயிரக் கணக்கானோர் பாதிப்படைந்துள்ளனர்.

புலமைப் பரிசில் பரீட்சையைச் சுமூகமாக நடத்துவதற்கு அனர்த்த முகாமைத்துவத் திணைக்களம் மற்றும் ஏனைய திணைக்களங்களிடம் ஒத்துழைப்பை எதிர்ப்பார்த்துள்ளது.

அனர்த்த நிலைமைகளால் சில மாவட்டங்களில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அது தொடர்பிலும், எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய அனர்த்தங்கள் குறித்தும் தொடர்ந்தும் அவதானம் செலுத்தப்பட்டு வருகின்றது.

எனவே, அனர்த்த முகாமைத்துவ மையத்துடன் இணைந்து, பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# 300 இற்கு மேற்பட்ட மரங்கள் கொழும்பை அச்சுறுத்துகின்றன!

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு மாநகர சபையின் எல்லைக்குள் 300 இற்கும் மேற்பட்ட மரங்கள் மக்களுக்கும் உடமைகளுக்கும் அச்சுறுத்தலாக உள்ளன. இவை இனங்காணப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அபாயகரமான மரங்கள் முறிந்து விழுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் புறநகர் பகுதிகளில் ஏற்படக் கூடிய அபாயங்களை குறைப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்



தொடர்பான கலந்துரையாடல் கொழும்பு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

இதன்போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அச்சுறுத்தலாக உள்ள மரங்களை உடனடியாக அகற்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புறநகர் பகுதிகளில் மிகவும் பொருத்தமான மற்றும் தரமான மரங்களை நடுவதை உறுதி செய்வதற்கான முறையான அமைப்பை தயாரிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இராஜாங்க அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## ஹர்த்தால் அறிவிப்பை...

10 ஆயிரம் ரூபா தொடக்கம் 20 ஆயிரம் ரூபா வரை நாளாந்தம் பணம் புரள உழைப்போர் சிறு வணிகர்கள். அப் புரளலில் தேறும் ஆயிரம் அல்லது இரண்டாயிரம் ரூபாவுக்காக நாள் முழுதும் வாடிக்கையாளருக்காகக் காத்திருக்கின்றார்கள். இத்தகைய சிறு வணிகர்களின் தொகை 3 இலட்சம் ஈழத் தமிழர் தாயகத்தில்.

பொது முடக்கத்தால் மகிழ்ச்சியடையக் கூடியவர்கள் நாளாந்தம் உழைக்காமல் மாதம்தோறும் வங்கியில் சம்பளத்தைக் குறைவின்றிப் பெறுகின்ற அரச ஊழியர்கள், பொது நிறுவன ஊழியர்கள். அவர்களுள்ளும் கடமை உணர்வாளர் முடங்க விரும்பார். ஈழத் தமிழர் தாயகத்தில் அவர்களின் தொகை 3 இலட்சமே.

ஈழத் தமிழர் தாயகத்தில் பெருவணிகர் தொகை 25 ஆயிரம் தொடக்கம் 30 ஆயிரம் வரை. பொது முடக்கத்தால் இவர்களுக்கு இழப்புக் கணிசமாகும். எனினும், அந்த இழப்பைத் தாங்கும் வலிமை அவர்களுக்குப் பெருமளவு உண்டு.

பயண முன்பதிவுடன் காத்திருக்கும் நடுத்தர மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள வாய்ப்புகளை எதிர்நோக்கும் இளைஞர் யாவரையும் பொது முடக்கம் கடுமையான உளைச்சலுக்கு உள்ளாக்கும்.

பொது முடக்கத்துக்கு அழைத்த குபேரர்களான அரசியல்வாதிகளே, போராட்டங்களால் தொடர்ச்சியாகப் பொருள் இழந்து, ஊக்கம் இழந்து, மெது மெதுவாக மீண்டு, இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் ஈழத் தமிழர் தாயகத்தின் ஏழைகளான 8 இலட்சம் குடும்பத் தலைவர்கள் மீது, சார்ந்த பொதுமக்கள் மீது பொருளாதாரச் சுமையை ஏற்றாதீர்கள்.

மனிதச் சங்கிலிப் போராட்டத்துக்கு அழைத்தீர்கள். மக்கள் வரவில்லை என்ற குறை உங்களுக்கு. உங்கள் போராட்டம் ஈழத்தமிழர் தாயகம் முழுவதுமாக அமையவில்லை.

மருதனாமடத்தில் போராடினால் முசலியில்உணர்வுஹறுமா?கொக்குவிலில்போராடினால் கல்முனையில் உணர்வு பீறிடுமா? குளப்பிட்டிச் சந்தியில் மண்டியிட்டால் கொக்கட்டிச்சோலையில் உணர்வு குமுறுமா?

25 ஆயிரம் சதுர கிலோமீற்றர் நீண்டு அகன்ற தமிழர் தாயகத்தை 5, 6 சதுர கிலோமீற்றர் பரப்புக்குள் முடக்க முயலாதீர்கள். பிரதேசவாதத்தைத்தூண்டாதீர்கள். யாழ்ப்பாணிகள் ஆட்சி எங்களுக்கு வேண்டாம் என ஏனைய பிரதேசத்தவர் கூறும் நிலைக்குத் தள்ளாதீர்கள்.

போராட்டத்துக்கு உரிய காரணங்கள் உள்ளன. மனித நாகரிக வரலாறே போராட்டத்தின் பெறுபேறு. போராட்டம் இல்லாமல் வாழ்க்கை இல்லை.

இன்றைய மறுவாழ்வுச் சூழ்நிலையில், தோல்வியால் முடங்கிய விடுதலை உணர்வுகளையும் தோல்வியால் இழந்த தற்சார்புப் பொருளாதாரத்தையும் மீட்டெடுக்கும் நிலையில், பொது முடக்கம் போராட்டமாகாது. இயல்பு வாழ்க்கையைக் குழப்புவது போராட்டமாகாது. பொருளாதாரத்தை வீழ்த்துவது போராட்டமாகாது.

பொது முடக்கத்தைக் கோராமல் போராட்ட உத்திகளை மாற்றுங்கள். இயல்பு வாழ்க்கையைக் குழப்பாமல், மீள் வளர்ச்சியை வீழ்த்தாமல் போராட்ட உத்திகளைத் தீர்மானியுங்கள்.

ஈழத் தமிழர் தாயகத்தின் மரபுகளை மீட்டெடுக்கும் போராட்டத்தைக் கடந்த ஆறு ஆண்டுகளாகச் சிவ சேனையினர் நிகழ்த்தி வருகிறோம். ஈழத் தமிழர் தாயகம் எங்கும் போராட்டங்களை நடத்தி வருகிறோம்.

ஒவ்வொரு போராட்டத்திலும் சிவ சேனையினர் வெற்றி அடைந்திருக்கின்றோம். எந்த ஒரு போராட்டத்திலும் மக்களின் இயல்பு வாழ்க்கை குழம்பவில்லை. எந்தவொரு போராட்டத்திலும் எவரும் கைதாகவில்லை. அவ்வாறே நாங்கள் போராட்ட உத்திகளை வகுத்தோம், வெற்றியடைந்து வருகின்றோம்.

தோல்வியடைந்த சமூகம் நாங்கள். அடிமைகளாக வாழும் சமூகம் நாங்கள். இழப்புகளைக் கடுமையாகச் சந்தித்த சமூகம் நாங்கள். குபேரர்களான அரசியல்வாதிகளே, கஞ்சி குடிக்கும் மக்களைக் கவனத்தில் கொள்ளுங்கள். அரசியல் அடிமைகளாக உள்ள அவர்கள், பொருளாதார அடிமைகளாகத் தொடர முடியாது. பொது முடக்க அறிவிப்பை மீளப் பெறுங்கள்." – என்றுள்ளது.

## தமிழரசின் முன்னாள் எம்.பி....

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார். 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அவர் போட்டியிட்டாலும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகவில்லை. எனினும், அந்தத் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவான நிமலன் சௌந்தரநாயகம் ஒரு மாத காலத்துக்குள் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து அவரின் வெற்றிடத்துக்குப் பொன். செல்வராசா தெரிவு செய்யப்பட்டு மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினரானார்.

2001 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அரசியல் கூட்டணி நிறுவப்பட்டது. அதில் பொன்.செல்வராசாவின் அர்ப்பணிப்பு அளப்பரியது. அந்தக் கூட்டமைப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அவர் போட்டியிட்டு மீண்டும் நாடாளுமன்றம் சென்றார்.

2010ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சின் மூத்த துணைத் தலைவராகவும், மத்திய குழு, அரசியல் குழு ஆகியவற்றில் உறுப்பினராகவும் அவர் அங்கம் வகித்தார்.

அவரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இலக்கம் 68, புகையிரத நிலைய வீதி, மட்டக்களப்பில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## உலக அமைதியின்...

உலக அமைதியின் எதிர்காலமே கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் மூத்த சட்டத்தரணியுமான என்.சிறீகாந்தா தெரிவித்தார்.

இன்று ஊடகங்களுக்கு அவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் இது தொடர்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கும், ஹமாஸ் இயக்கத்துக்கும் இடையில் இப்போது தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் போரில், காசா பிரதேசத்தில் வாழும் பலஸ்தீன மக்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டும், காயப்படுத்தப்பட்டும் வருகையில், அப்பிரதேசம் தண்ணீர் மற்றும் மின்சாரமின்றி திணறிக் கொண்டிருக்கின்றது.

மிக மோசமான மனிதாபிமான நெருக்கடி ஒன்று, காசாவில் ஏற்பட்டிருக்கும் நிலையில், இஸ்ரேல் நாட்டிலும் பொதுமக்களின் உயிரிழப்புக்களும் பாதிப்புக்களும் உயர்ந்து வருகின்றன.

இப்பொழுது நடைபெறுவது இஸ்ரேலின் அரச பயங்கரவாதத்துக்கும், பலஸ்தீன மக்களின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திய ஹமாஸ் இயக்கத்தின் பயங்கரவாதத்துக்கும் இடையிலான போர் என்பதே உண்மையானது.

இஸ்ரேலுக்குள் ஊடுருவித் தாக்கிய ஹமாஸின் போர் நடவடிக்கையை சாட்டாக வைத்து, அதன் கட்டுப்பாட்டில் உள்ள காசா பிரதேசத்தையே தரைமட்டமாக்கி, இரு துண்டுகளாக அமைந்திருக்கும் பலஸ்தீன மண்ணின் ஒரு துண்டினை ஒட்டுமொத்தமாக விழுங்கிவிடும் இலக்குடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இஸ்ரேலுக்கு, அமெரிக்காவும் மற்றும் மேற்குலக நாடுகள் பலவும் உதவிக் கொண்டிருக்கும் நிலைமையில், உலக அமைதியின் எதிர்காலமே கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

1948 இல் இஸ்ரேலின் தோற்றத்துடன், தமது சொந்த பலஸ்தீன மண்ணிலிருந்து வேட்டையாடி விரட்டப்பட்ட பலஸ்தீன மக்களின் நீதிக்கான நீண்ட போராட்டத்தில், 1993இல் அன்றைய அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் மத்தியஸ்தத்துடன், இஸ்ரேலிய பிரதமர் யிற்சாக் றபினுக்கும், பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசிர் அரபாத்துக்கும் இடையில் கையெழுத்தான சமாதான ஒப்பந்தம், பலஸ்தீன மண்ணில், யூதர்களுக்கு இஸ்ரேலும், பலஸ்தீனிய அரபுக்களுக்கு பலஸ்தீனமும் என இரண்டு நாடுகள் அருகருகாக அமைவதற்கு வழிகாட்டி, ஓர் வரலாற்று ஆச்சரியத்தையே நிகழ்த்தியிருந்தது.

ஆனால், படுகொலை செய்யப்பட்ட பிரதமர் யிற்சாக் றபினுக்குப் பிறகு, ஆட்சி அதிகாரத்திற்கு வந்த இஸ்ரேலிய தலைவர்களின் நடவடிக்கைகளால், அந்த சமாதான ஒப்பந்தம் செயல் இழந்து போனதால் ஏற்பட்ட மோதல் சூழ்நிலையின் உச்சக்கட்டமே, இப்போது நடைபெறும் போராகும்.

இந்தப் போரில் தலையிட்டு, போர் நிறுத்தம்ஒன்றினைசாதிக்கும்வல்லமைகொண்டுள்ள நாடுகள் எல்லாம், இஸ்ரேலின் பக்கமே இப்போது சாய்ந்து நிற்கின்றன.

அனைத்து வாகனங்களையும் இறக்குமதி செய்வதற்கு அனுமதி! அமைச்சு வெளியிட்ட தகவல்

மத்திய கிழக்கின் இன்றைய நிலைமை, 14 வருடங்களுக்கு முன்னர், எமது இலங்கைத் தீவில், வன்னிப் பிரதேசத்தில் அரங்கேற்றப்பட்ட மனித அவலத்தையே ஞாபகப்படுத்துகின்றது.

அரசியல் நீதி கோரி நிற்கும் இலங்கைத் தமிழ் மக்கள், தம்மைப் போலவே, ஏகாதிபத்திய சக்திகளால் வஞ்சிக்கப்பட்ட பலஸ்தீன மக்களோடு உணர்வுகளால் ஒன்றி நிற்கின்றனர் என்பதை உலகுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய நேரம் இதுவாகும். இது தமிழ்த் தேசிய அமைப்பக்கள் அனைத்தினதும் கட்டாயக் கடமையும் கூட." – என்றுள்ளது.

# இஸ்ரேல் - பாலஸ்தீனப் போருக்கு எதிராகக் கொழும்பில் போராட்டம்




இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையில் இடம்பெற்று வரும் மோதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கொழும்பில் இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் கொழும்பு - 7 இல் அமைந்துள்ள தெவட்டகஹ வத்த பள்ளிவாசலுக்கு அருகில் இடம்பெற்றது.

இதன்போது, இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையில் இடம்பெற்று வரும் போருக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும், பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவிப்பதாகவும், இஸ்ரேல் அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்ட பலர் இந்தப் போராட்டத்தில் கலந்துக் கொண்டனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பிரிட்டனில்...**

உறுப்பினரான ஜோன் பென்றோஸ்டனும், ஸ்டோக் ஆன் ட்ரெண்ட் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஜாக் ப்ரெட்டன் எம்.பியுடனும் மெய்நிகர் வழியாக இந்தச் சந்திப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

சட்ட ஆலோசகரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான கீத் குலசேகரம் தலைமையில் இடம்பெற்ற இந்த முக்கிய சந்திப்புக்களில், பிரிட்டன் தமிழர்கள் அமைப்பின் துணைத் தலைவரும், கவுன்சிலருமான ஜெய் கணேஸ் மற்றும் இனப் படுகொலையைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமாக சர்வதேச மையத்தின் சார்பில் றோய் ஜக்ஷோன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன் இனப்படுகொலையின் நேரடி சாட்சியங்கள் மற்றும் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களான கோகுலன் குணசீலன், ஜனார்த்தனன் இராஜேஷ்வரன், மோகனதர்சன் நாகநாதன்மற்றும்ஶ்ரீபன்நாகநாதன்கலந்து கொண்டு, தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்கள்.

கீத் குலசேகரம் தனது தலைமை உரையின்போது, இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலைக்கு வரலாற்று ரீதியாக பிரித்தானியாவே பொறுப்பு என்பதை விளக்கி, தமிழ் மக்களுக்கு நீதி வழங்க வேண்டிய கடமைப்பாட்டையும் எடுத்துரைத்தார்.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சுக்குப் போதுமான ஆதாரங்களைச் சமர்ப்பித்த போதும் இன்னும் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியிருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள் மட்டுமன்றி, தற்போது இலங்கையில் தொடரும் ஆள் கடத்தல் மற்றும் சித்திரவதைகளும் சவேந்திர சில்வாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஆயுத படைகளே மேற்கொண்டு வருவதால் அதற்கும் சவேந்திர சில்வாவே பொறுப்பு என்றும், சந்திப்பில் கலந்து கொண்ட சித்திரவதைக்குள்ளானவர்கள் இதற்கு நேரடிச் சாட்சி என்றும்தெரிவித்தார்.

சவேந்திர சில்வா யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டிருப்பத ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் குறிப்படப்பட்டிருப்பதையும், அவர் மீது ஏற்கனவே அமெரிக்கா, கனடா பயணத்தடை விதித்துள்ளதையும் எடுத்துக்காட்டிய அவர், அமெரிக்கா, கனடாவின் வழியை பின்பற்றி பிரித்தானியாவும் தடை விதிக்க வேண்டும் என்று கோரி பிரித்தானிய புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதையும் விவரித்தார்.

கருத்துக்களை உள்வாங்கிய இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது சந்தேகங்களை கேட்டு தெளிவடைந்ததுடன், ஈழத் தமிழர்களின் கோரிக்கையையும் ஆதங்கத்தையும், தமது பகுதியில் வாழும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் பிரித்தானிய அரசுக்கு எடுத்துரைப்பதாகவும், இதுவரை நடவடிக்கை எடுக்காமைக்கு காரணத்தைக் கேட்டு கடிதம் அனுப்புவதாகவும் உறுதியளித்தனர்.

---

**கிளிநொச்சி வீதி விபத்தில்...**

கோணாவில் நோக்கிப் பயணித்த உழவு இயந்திரமும் எதிர்த் திசையில் வந்த மோட்டார் சைக்கிள் மோதி இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

நேற்று இரவு இடம்பெற்ற இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## திருச்சபை அழுங்குப்பிடி

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதி, நியாயமான விசாரணைகளை நடத்தாமலேயே சுமார் 15 வருடங்கள் வெற்றிகரமாகக் கடத்திவிட்ட கொழும்பின் பௌத்த - சிங்களப் பேரினவாதத் தலைமைகள் கொழும்பிலும், கிழக்கிலும் நடந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பிலும் கண்துடைப்பு விசாரணைகள் மூலம் நிலைமையைச் சமாளிக்கலாம், தனது புலனாய்வுப் பிரிவுகளின் தகிடுதத்தங்களும், பேரினவாதிகள் மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்காக அத்தொடர்த் தாக்குதல் நடத்தப்பட்டது என்ற உண்மையும் வெளிவராமல் மூடி மறைக்கலாம் என்றெல்லாம் திட்டம் தீட்டிச் செயற்படுகின்றன.

ஆனால், பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ மக்கள் சார்பில் நீதிக்காகப் போராடிவரும் தென்னிலங்கைத் திருச்சபை விடுவதாக இல்லை.

சர்வதேச விசாரணைக்கு இடம் இல்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்தமையை அடுத்து, தென்னிலங்கைத் திருச்சபைப் பீடம் ஒன்றுபட்டு ஐந்து அம்சங்கள் அடங்கிய புதிய விசாரணை திட்டம் ஒன்றை இப்போது முன் வைத்திருக்கிறன.

■ மேற்படிக் குண்டு தாக்குதல் தொடர்பான 99 வீத விசாரணைகள் முடிந்து விட்டன என்ற பொதுப் பாதுகாப்பு அமைச்சரின் அறிவிப்பு உண்மையை மூடி மறைத்து, பொது மக்களைத் திசை திருப்பும் நோக்கம் கொண்டது.

■ 'சனல்-4'வெளியிட்ட தகவல் உட்பட மற்றும் பல்வேறு ஆணைக் குழுக்கள், விசாரணைப் பிரிவுகள் வெளிப்படுத்திய விடயங்கள் குறித்தும் பக்கச் சார்பற்ற - நீதியான - வெளிப்படையான - விசாலமான - விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இது தொடர்பான புலனாய்வுகள், சுயாதீனமான சர்வதேச புலனாய்வு அணியால் மேற்பார்வைசெய்து வழிப்படுத்தப்பட வேண்டும்.

■ ஆரம்பத்தில் இக்குண்டு வெடிப்புகள் குறித்து விசாரணை நடத்திய குற்றப் புலனாய்வு அதிகாரிகள் விட்ட இடத்தில் இருந்து விடயத்தைத் தொடர அனுமதிக்கப்பட வேண்டும்.

■ புதிய விசாரணைகள் சுதந்திரமாக நடைபெறுவதற்கு வசதியாக ஜனாதிபதி ஆணைக் குழு அடையாளம் கண்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களான நிலாந்த ஜெயவர்தன மற்றும் தேசபந்து தென்னக்கோன் ஆகியோர் சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட வேண்டும்.

■ இவ்விடயம் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மேலும் காலதாமதப்படுத்தப்படாமல் முழு அளவில் உடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

- இந்த விவகாரத்தில் நீதி, நியாயமான விசாரணைகள் நடத்தப்பட்டு, உண்மைகள் வெளிக் கொணரப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் கிறிஸ்தவத் திருச்சபை அழுங்குப்பிடியாக நிற்கிறது. அது சரியான - நியாயமான - நிலைப்பாடே. ஆனால் ரணில் அரசு அதற்கு இணங்கி, உண்மைகளைக் கண்டறிந்து வெளிப்படுத்த முன்வருமா என்பதே கேள்வி.

# முகாமைத்துவ அபிவிருத்தி பிரிவுக்கு புதிய பணிப்பாளர்



(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி பிரிவின் புதிய பணிப்பாளராக என்.எம்.நௌபீஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவரது நியமனக் கடிதத்தை மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க நேற்று (12) திருகோணமலையில் உள்ள மாகாண பிரதம செயலாளர் அலுவல கத்தில் வைத்து வழங்கி வைத்தார்.

கிழக்கு மாகாண ஆளுநரால் இந்தப் பதவிக்கான நியமனம் வழங்கப்பட்டது.

இலங்கை நிர்வாக சேவை அதிகாரியான இவர் முன்னால் மாகாண விளையாட்டு பணிப் பாளர், கிண்ணியா ஏறாவூர் நகர சபைகளின் செயலாளர், சிறுகைத் தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர், மாகாண விவசாய அமைச்சின் உதவிச் செயலாளர் ஆகிய பதவிகளை வகித்தவர்.

# யானை ஊருக்குள் புகுந்து பலத்த சேதம் விளைவிப்பு!

(ஹஸ்பர்)

திருகோணமலை பாலம்போட்டாறு கிராமத்தின் பத்தினி புரம் பகுதியில் காட்டு யானைகளால் தொடர்ந்து பலத்த சேதங்கள் ஏற்படுகின்றன என்று அப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஊருக்குள் நேற்று இரவு (12) புகுந்த காட்டு யானைகளால் பயன் தரும் மரங்களான தென்னை, வாழை என்பவற்றுடன் கத்தரி,வெண்டிச் செடிகளும் துவம்சம் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியை அண்மித்த இடத்தில் பாதுகாப்பான யானை வேலி இன்மை காரணமாக ஊருக்குள் யானைகள் படை எடுக்கின்றன என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மாலை நேரங்களில் தங்களது பிள்ளைகளை மேலதிக வகுப்புக்கு அழைத்து சென்று பயத்துடனே வீடுகளுக்கு செல்ல நேரிடுகிறது. நிம்மதியாக தூங்க முடியாத நிலைமை உள்ளது.

மாலை வேலையிலேயே யானை ஊருக்குள் வந்து விடுகிறது. இதனால் அச்ச சூழ் நிலையில் காலத்தைக் கழிக்க வேண்டியுள்ளது என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தோட்டச் செய்கையை வாழ்வாதாரமாக நம்பியே இருக்கும் போது அதனையும் யானை அழித்து வருவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

பல தடவை உரிய அதிகாரிகளிடத்தில் கோரிக்கை விடுத்தும் எவ்வித தீர்வும் கிட்டவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

யானையின் தாக்குதலில் இருந்து தங்களை பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட தரப்புக்களிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# வாய் புற்றுநோய் தொடர்பான செயலமர்வு

(நூருல் ஹுதா உமர் )

சுகாதார அமைச்சின் தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் வாய் புற்றுநோயின் முன் அறி குறிகளைக் கண்டறிதலும் வாய் புற்றுநோயைத் தடுத்தலும் எனும் தொனிப்பொருளில் கல்முனை பிராந்திய வாய் சுகாதாரப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி செயல மர்வு நேற்று (12) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் ஆலோ சனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந் திய வாய் சுகாதாரப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச். எம்.சரூக் ஏற்பாடு செய்த நிகழ்வு பணிப் பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரிகள் மாவட்ட மற்றும் பிரதேச வைத்திசாலைகளின் பொறுப்பு வைத் திய அதிகாரிகள், பல் மருத்துவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தப் பயிற்சிச் செயலமர்வில் அம்பாறை மாவட்ட பொது வைத்திய சாலை வாய், தாடை, முகம் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் டிலான் பெர்னான்டோ பிரதம வளவாளராக கலந்துகொண்டு விரிவுரை நிகழ்த் தினார். இதன்போது நோயாளிகளை நேரடியாகப் பரிசோதனை செய்த னர்.



# பொகவந்தலாவையில் சிறுத்தையின் சடலம்

பொகவந்தலாவை பிரதேச தோட்டக் கம்பனிக்கு சொந்தமான லெதண்டி தோட்டத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை சிறுத்தை ஒன்றின் சடலம் கண்டெடுக்கப் பட்டுள்ளது.

சுமார் நான்கு அடி நீளம் கொண்ட சிறுத்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

அந்தத் தோட்டத்திற்கு தற்செய லாக வந்த நபர் ஒருவர் சிறுத்தை யின் சடலத்தை கண்டு ஹட்டன் பொலிஸாருக்கும் நல்லதண்ணி வனவிலங்கு அலுவலகத்திற்கும் உடனடியாக தகவல் வழங்கியுள் ளார்.

இதனையடுத்து சம்பவ இடத் திற்கு சென்ற அதிகாரிகள் சிறுத் தையின் சடலத்தை சோதித்து அந்தச் சிறுத்தை வேறு மிருகங்க ளின் தாக்குதலால் உயிரிழந் துள்ளதாகத் தெரிவித்தனர்.



# கைபேசிப் பவனையில் இருந்து விலகினால் சமுதாயத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்

## மாணவர்களுக்கு அக்கறைப்பற்று மாவட்ட நீதிபதி ஹம்ஸா அறிவுரை

(சப்னா றிபாஸ்)

மாணவர்கள் கைத்தொலைபேசி பாவனையிலிருந்து முற்றாக விலகி யிருப்பதன் மூலம் அவர்களையும், சமூகத்தையும் பாதுகாத்துக்கொள்ள முடியும். பொதுவாக14 தொடக்கம் 16 வயது பிரிவிலுள்ள பெண் பிள்ளைகள் கைத் தொலைபேசி தொடர்பான சிக்கலுக்குள் அகப்பட்டு இன்று நீதி மன்றங்களில் அலைந்து திரிவது கவலைக்குரிய விடயம்.

இவ்வாறான விடயங்களைப் பெற்றோரும், ஆசிரியர்களும் எடுத்துக் கூறியும் அவற்றை உணராத பிள்ளை களையே இன்று நீதிமன்றங்களில் காணக் கூடியதாகவுள்ளனர். இதுவே நிதர்சனமான உண்மையாகும்.

'ஆசிரியர்கள் மேய்ப்பாளர்கள்' என்ற அடிப்படையில் என்றும் இறை வனிடத்தில் தங்களுடைய கடமைக்கு பொறுப்புச் சுமத்தப்பட்டு பொறுப்பு கூறுகின்றவர்களாக இருக்கின்றார்கள். ஆசிரியர்கள் மாணவர்களை வழிப் படுத்த வேண்டிய கடப்பாட்டில் இருக் கின்றார்கள். அந்த மேய்ப்புப் பணியி லிருந்து ஆசிரியர்கள் தவறிவிட முடி யாது. ஆனால் இன்று தமது கடமை யைச் சரியாகச் செய்யும் ஆசிரியர்கள் கூட சமூகத்தில் பல்வேறு பிரச்சினை ளையும், இன்னல்களையும் எதிர்கொள் கின்றனர். மாணவர்கள் ஆசிரியர்க ளுடைய வழிப்படுத்தலை உதாசினம் செய்வதனாலேயே பல்வேறு பிரச்சி னைகள் எழுகின்றன.

இவ்வாறு அக்கரைப்பற்று மாவட்ட நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா கூறினார்.

அக்கரைப்பற்று ஆயிஸா பாலிகா மகா வித்தியாலயத்தில் பெரா சரிட்டி நிறுவனத்தின் ஏற்பாட்டில் “நற்பிரஜை களாவோம்” எனும் தொனிப் பொருளில் நிகழ்வு இன்று (13) இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ் வாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் திருமதி ஹாறு தீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நீதிபதி ஹம்ஸா தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு-

ஆசிரியர்கள் மாணவர்களை நோக்கி கூறும் அறிவுரைகளை உள் வாங்காமல் வேறு சூழ்நிலை காரணங் களால் தூண்டப்பட்டு கல்வி நோக்கை விட்டு வழி தவறிச் சென்றுகொண்டிருக் கிறார்கள். இதனால் நல்ல நிலையில் இருக்கும் மாணவர்களும் இச் சிக்க லுக்குள் அகப்பட்டுக்கொள்ளும் துர்ப் பாக்கிய நிலை எழுந்துள்ளது.

மாணவர்கள் கூடுதலான நேரத்தை ஆசிரியர்களுடன் பாடசாலையில் கழிக்கின்றார்கள். அந்த நேரப் பகுதி யில் சட்டத்தின் பார்வையில் மாண



வர்களின் பராமரிப்பும், கட்டுக்காவலும் ஆசிரியர்களிடத்திலும், அதிபரிடத்திலும் ஒப்படைக்கப்படுகின்றது.

இதனால் மாணவர்கள் மீது முழுப் பொறுப்பையும் கொண்டுள்ள ஆசிரி யர்கள், பாடசாலையில் அவர்களை வளப்படுத்த வேண்டிய கடமையை புரிந்தேயாக வேண்டும்.

அண்மைக் காலமாக ஆசிரியர்கள், மாணவர்கள் தொடர்பான சிறுசிறு பிணக்குகளும், வழக்குகளும் நீதிமன் றத்துக்கு அங்கங்கே வந்துகொண்டே இருக்கின்றன. அதிலும் ஆசிரியர் மாணவனைத் தாக்கினார், மாணவன் ஆசிரியரைத் தாக்கினார் மற்றும் பாட சாலைகளில் ஏற்படுகின்ற மோதல்கள் என்பன நீதிமன்றம்வரை வருகின்றன. நாங்கள் எங்களை சுய பரிசோதனை செய்து எங்களை மாற்றிக் கொள்ள வேண்டிய விடயமாகும்.

ஸ்மாட் கைப்பேசிப் பாவனைகள் அதிகரித்துள்ளமையால் வருகின்றன பிரச்சினைகளும் தற்காலத்தில் அதிக ரித்து காணப்படுகின்றன. விசாரிக்கும் போது மாணவர்களும், மாணவிகளும் தெரிவிக்கும் கருத்துகள் வியப்பாக இருக்கின்றன.

எனது பார்வையில் மாணவர்கள் மத்தியில் தொலைபேசிப் பாவனை தடைசெய்யப்பட்ட ஒரு விடயமாகக் காணப்படுகின்றது.

கொரோனா காலத்தில் மாணவர்க ளுக்கு கற்பிக்க வேறுவழியில்லாத சந்தர்ப்பத்தில் கைத்தொலை பேசிகள் சூம், இணையவழி கற்பித்தலுக்காக பயன்படுத்தப்பட்டன.

இதனால் பயனடைந்த மாணவர்கள் இருந்தாலும் வழிகெட்டுப்போன மாணவர்கள்தான் அதிகம். அன்பான மாணவர்களே! நீங்கள் கைத்தொலை பேசிப் பாவனையை விட்டும் முற்றாக விலகியிருங்கள். கைத்தொலைபேசி உங்களது வயதுடன் நோக்கும் போது விரும்பத் தகாத ஒன்று. அதனால் மாணவர்கள் அடைந்த நன்மைகளை விட தீமைகளே அதிகம்.

படிக்கும் காலத்தில் மனதில் இலட் சியங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த இலட்சியத்தை அடைந்து கொள்ளக் கூடிய வாய்ப்புக் களை இனங்கண்டு அதனை நோக்கி நகர வேண்டும்.

பல அறிஞர்களைப்பற்றி பேசுகின்ற போது அவர்கள் தங்களது இலட்சியங் களை அடைந்து கொள்ள எடுத்துக் கொண்ட முயற்சிகளையும், அவர்கள் நிகழ்த்திய சாதனைகளையும் அறிந்து அவ்வாறே நமது இலட்சியங்களை வெல்ல முயற்சி செய்து அதற்கமைய செயற்பட வேண்டும்.

நமது இலட்சியங்களை மறந்து வேறு சிந்தனைகளிலும் வீண் செயற் பாடுகளிலும் ஈடுபடுவதில் இருந்து நாம் தவிர்ந்து கொள்ள வேண்டும். பொருத் தமற்றவர்களுடன் தொடர்பு, அறிமுக மில்லாதவர்களுடைய நட்பு மற்றும் கைத்தொலைபேசிப் பாவனை போன் றவற்றின் மீது நாம் கவனமாக இருக்க வேண்டும்.

நாம் சமூதாயத்தின் நல்ல நிலையை அடைந்து கொள்ள முன்மாதிரியான வர்களுடைய செயற்பாடுகளை பின் பற்றி நடக்க வேண்டும்.

இன்று பல துறைகளில் பெண்கள் சாதனை படைத்திருக்கிறார்கள். சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருக்கிறார்கள். இது போன்றே நாமும் இலட்சியத்துடன் பயணிக்கின்ற போது நமக்கு எதுவும் தடையாக இருக்க முடியாது. இலக்கு நோக்கிப் பயணிக் கையில் நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

சில நாடுகளில் நற்பிரஜைகளை உருவாக்க கைத்தொலைபேசிப் பாவ னையை மாணவர்கள் மத்தியில் முற் றாக தடைசெய்திருக்கிறார்கள். காதல் என்ற தோறணையில் பசப்பு வார்த் தைகளைப்பேசி எமது மாணவர்கள் அந்த வலையில் வீழ்ந்து பல சீரழி வுகளைச் சந்தித்து வருகின்றனர். அவ் வலையில் வீழ்ந்தவர்கள் புகைப் படங்களைப் பரிமாறி அதனை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்வதால் குறித்த பெண்களின் குடும் பமே சமூதாயத்தில் இழிவாக பார்க் கப்படுகின்ற நிலமை உருவாகின்றது.

எனவே மாணவர்கள் கைத்தொலை பேசி பாவனையிலிருந்து முற்றாக வில கியிருப்பதன் மூலம் அவர்களையும், சமூகத்தையும் பாதுகாத்துக்கொள்ள முடியும். பொதுவாக14 தொடக்கம் 16 வயது பிரிவிலுள்ள பெண் பிள்ளைகள் கைத் தொலைபேசி தொடர்பான சிக்க லுக்குள் அகப்பட்டு இன்று நீதிமன் றங்களில் அலைந்து திரிவது கவ லைக்குரிய விடயம்.

இவ்வாறான விடயங்களைப் பெற்றோரும், ஆசிரியர்களும் எடுத்துக்

(09ஆம் பக்ககம் பார்க்க)





# கல்முனை சாஹிரா ஆசிரியர் தின நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்த மருது சாஹிரா கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வுகள் பாடசாலை எம்.எஸ். காரியப்பர் மண்டபத்தில் அதிபர் எம். ஐ.ஜாபிர் தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும், கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகளின் இடமாற்றப்பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான எம்.எப்.எம். சர்ஜுன் கலந்து கொண்டார். விஷேட விருந்தினராகப் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் டாக்டர் எம்.எச். சனூஸ் காரியப்பர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் ஆசிரியர்களின் பல கலைநிகழ்வுகள் நடைபெற்றன. பாட சாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவினரால் ஆசிரியர்கள் நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.



# கல்முனை பற்றிமாவில் ஆசிரியர் தின விழா

( வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் சர்வதேச ஆசிரியர் தின விழா இன்று (13) வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபர் அருட் சகோதரர் றெஜினோல்ட் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது.

நிகழ்வில் ஆசிரியர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். கூடவே இம்முறை கராத்தே போட்டியில் தேசிய ரீதியில் வெண்கலப் பதக்கம் பெற்ற பற்றியா



மாணவன் கேதீஸ்வரன் ரோஹித் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். பயிற்றுவிப்பாளர்களும் பாராட்டப்பட்டார்கள்.ஆசிரியர்களின் கலைநிகழ்ச்சிகள் மேடையேறின.

## கைபேசிப் பவனை...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூறியும் அவற்றை உணராத பிள்ளைகளையே இன்று நீதிமன்றங்களில் காணக் கூடியதாகவுள்ளனர். இதுவே நிதர்சனமான உண்மையா கும்.

அண்மைக் காலமாக பெண்களின் புகைப்படங்களை பதிவேற்றம் செய்யப் போவதாக அச்சுறுத்தி பணம்பறிக்கும் இணைத்தளக் கள்வர்கள் அதிகரித்துக் காணப்படுகின்றார்கள். இன்று எத்தனையோ தந்தைமார் தங்களது மகள்மார்களின் புகைப்படங்கள் வெளிவந்துவிடக் கூடாது என்பதற்காக லட்சக் கணக்கில் இவ்வாறான கள்வர்களுக்குச் செலவு செய்கின்றார்கள் என்பது பற்றியும் அறிந்து கொள்ளுங்கள்.

எனவே இவ்வாறான சீரழிவிலிருந்து விடுபட்டு இலக்கு நோக்கி பயணிப்பவர்களாக மாணவர்கள் மாறுகின்ற போது மேய்ப்பாளர்களுடைய பணியை இலகுவாகச் செய்யக் கூடியதாக இருக்கும்.-என்றார்.



# இறுவட்டு வெளியீடு!

(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை தமிழ் குறிச்சி ஸ்ரீபத்திர காளி அம்மன் ஆலயத்தின் புகழ் பாடும் பக்தி பாமாலை இறுவட்டு வெளியீடு ஆலய பரிபாலன சபைத் தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் தலைமையில் நேற்று (12) இரவு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அம்பாறை மாவட்ட பதில் அரச அதிபர் வே.ஜெகதீஸன் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர், ஆலய பூசகர், ஆலய பரிபாலன சபையினர் கலந்து கொண்டனர்.



# இலவச சட்ட ஆலோசனைச் செயலமர்வு



(அஸ்ஹர் ஆதம்)

சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள பிரிவு மட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் அங்கத்தவர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை பற்றிய செயலமர்வு நேற்று (12) வியாழக்கிழமை சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம் மற்றும் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத் ஆகியோரின் வழிகாட்டலில் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களுக்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப். றிகாஸா ஷர்பீனின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் எம். எம்.ஆசிக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் விசேட அதிதியாக கல்முனை சட்ட உதவி ஆணைக்குழுவின் கிழக்கு மாகாண பணிப்பாளர் சட்டத்தரணி எம்.ரீ.சபீர் அஹமட் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் வளவாளர்களாக சட்டத்தரணி எம். அசாம், சட்டத்தரணி பாத்திமா ஷாமிலா, வைத்தியர் ஷறாப்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், அடிப்படைச் சட்டம் மற்றும் போதைப் பொருள் பாவனை தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.



# நுண் பிளாஸ்டிக் பாவனை...!



நாம் அறியாமலே எமது உணவில் பிளாஸ்டிக் கலக்கின்றது என்பது எம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? ஒரு கிழமைக்கு அண்ணளவாக ஒரு கடனட்டையின் அளவிலான நுண் பிளாஸ்டிக் எம் உடலினுள் சேர்கின்றது. கிட்டத்தட்ட இது 5 கிராம் அளவாகும்.

நுண் பிளாஸ்டிக் எனும் போது (Micro plastic ) ஒரு மைக்ரோ மீற்றர் முதல் 5 மில்லி மீற்றர் வரையான அளவைக் கொண்ட பல்வேறுபட்ட சுற்றுச் சூழல்களில் இருந்தும் அல்லது மனித நடவடிக்கைகளால் முறையாக அல்லது ஒழுங்கற்ற வகையில் சூழலுக்கு வெளியிடப்படும் பிளாஸ்டிக்குகளின் ஒரு குறித்த பின்னமாக வரைவிலக் கணம் செய்யப்படுகின்றது.

சிறு துண்டுகளாக உடைக்கப்பட்ட 10 -9 மீற்றர் அளவிலான பிளாஸ்டிக்குகள் நனோ பிளாஸ்டிக் என அழைக்கப்படுகின்றது.

நாம் பயன்படுத்தும் பெரும்பாலான பிளாஸ்டிக்குகள் பெற்றோலிய இரசாயனங்களில் இருந்து தயாரிக்கப்படுகின்றது. பிளாஸ்டிக் தயாரிப்பின் போது பல்வேறு இரசாயனங்கள், நிறமிகள் நிலைப்படுத்திகள், நிரப்பிகளைப் பயன்படுத்தி வேறுபட்ட இயல்புகளைக் கொண்ட பிளாஸ்டிக்குகள் தயாரிக்கப்படுகின்றன.

சோதனை மற்றும் பொருள்களுக்கான அமெரிக்க சமூகத்தால் வெளிவிடப்பட்ட ரெசின் அடையாளப்படுத்தல் குறிப்படுத்துகை முறைமைக்கமைய உற்பத்திக்கு பயன்படும் மூலப்பொருள்களுக்கு அமைய பிளாஸ்டிக்குகள் ஏழு முக்கிய வகைகளாக பிரிக்கப்படுகின்றன.

இவ்வகைப்பாடு முதன்முதலில் பிளாஸ்டிக் கைத்தொழில் சங்கத்தால் 1988 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து 2008 இலிருந்து சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சிப் பொருள்களுக்கான அமெரிக்க சங்கத்தால் நிர்வகிக்கப்படுகின்றது. இவ்வெண்ணின் முக்கிய நோக்கம் பயன்பாட்டின் பின் மீள்சுழற்சி செய்வதற்கு எளிதில் அடையாளப்படுத்துவதாகும்.

பிளாஸ்டிக் பொருள்களை இலகுவாக அடையாளம் காணும் தரநிலைகள் தொடர்பாக இலங்கை அரசிடமும் 2021 ஜனவரி 21 அன்று தனிச்சிறப்புடைய ஓர் வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டிருந்தது. (1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தின் பிரிவு 32 இன் கீழ் சுற்றுச் சூழல் அமைச்சால் கொண்டுவரப்பட்ட விதிமுறைகள்)

பொலிஎதிலீன் டெராப்தலேட எனப்படும் பிளாஸ்டிக் உணவுப் பதார்த்தங்களைப் பொதி செய்யப் பயன்படும். குறிப்பாக ஒட்சிசன் மற்றும் காபனீரொட்சைட் உடுருவலைத் தவிர்ப்பதன் மூலம் உணவு கெடுவதைத் தடுக்கவும் குளிர்பானங்களில் காபனீரொட்சைட்டை சிக்க வைக்கவும் உதவும்.

இந்தப் பிளாஸ்டிக்கில் ஆன்டிமனிட்ரை ஒக்சைட்டு உள்ளது. இது புற்றுநோயை உண்டாக்கும் ஒரு வேதிப் பொருள் ஆகும். இது உடலின் அகஞ்சுரக்கும் தொகுதியையும் பாதிக்கும். பேட் பிளாஸ்டிக்குக்குள் எவ்வளவு நேரம் உணவு அல்லது பானம் இருக்கின்றதோ அதற்கு ஏற்றவாறு உடலில் சேரும் இரசாயனமும் அதிகரிக்கும்.

இவ்வாறான காரணங்களால் பிளாஸ்டிக் குளிபான போத்தல்களில் தண்ணீர் சேமித்து வைக்க வேண்டாம் என்று மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர்.

உயர் அடர்த்தி பொலித்லீன் என்பது பிளாஸ்டிக்கை விட தடிப்பான மற்றும் வலுவான பொருள் மற்றும் இரசாயணப் பொருள்களைச் சேமிக்க பரவலாகப் பயன்படுகின்றது. இந்தவகை பிளாஸ்டிக்குகள் தயாரிப்பதற்கு குறோமியம் அல்லது சிலிக்கா படிகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பொலிவினைல் குளோரைட்டு எனப்படும் குழாய்கள் தயாரிப்புக்குப் பயன்படும் இவை உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் பொருள்களைக் கொண்டுள்ளன.

இதில் இருபினோல, பாதரசம் மற்றும் டையாக்சின்கள் உள்ளன. இவை புற்று நோயை ஏற்படுத்தக் கூடியன. மேலும் மீள்சுழற்சி செய்வது கடினம் என்றபடியால் இதன் பாவனையைக் குறைப்பது மிகவும் சிறந்ததாகப் பார்க்கப்படுகின்றது.

குறை அடர்த்தி பொலித்தீன் அகத்துரிஞ்சும் தொகுதியின் ஓமோன் செயற்பாட்டைக் குறைப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. உணவுகளைச் சேமிக்கப் பயன்படும். ஆனால் மீள்சுழற்சி செய்வது மிகவும் கடினம். பொலிப்ரொப்பிலீன் பிளாஸ்டிக் அதிக வலுவைக் கொண்டனவாகவும் வெப்பக் கடத்திலியாகவும் செயற்படும். பொதுவாக உணவைச் சேமிக்கப் பயன்படுத்தப்படும். சுகாதார அணையாடைத் தயாரிப்பிலும் பயன்படுகின்றது.

சில ஆய்வுகளின் படி அகத்துரிஞ்சும் தொகுதியின் ஓமோன் செயற்பாட்டைப் பாதிக்கும். சிலருக்கு ஆஸ்துமா அதிகரிப்பிற்கும் பங்களிப்புச் செய்வதாகவும் அறிய முடிகின்றது.

பொலிஸ்ரைரீன் அல்லது ஸ்ரைறோபோம் எனப்படுவது ரெஜிபோம் ஆகும். இது உணவு மற்றும் பொருள்களைப் பொதி செய்யப் பரவலாக பயன்படுகின்றது. இந்த வகைப் பிளாஸ்டிக் ஒரு சூடான திரவம் அல்லது எண்ணெய் திரவத்துடன் தொடர்புகொள்ளும் போது ஸ்டைரீனை வெளியிடுகின்றது. இது மனித நரம்பு மண்டலத்தை பாதிக்கும் ஒரு நச்சுப் பொருள். இந்த இரசாயனம் நுரையீரல் மற்றும் தொகுதிக்கும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்துகின்றது. மேலும் இவ்வேதிப் பொருள் மனித பரம்பரை அலகு விகாரத்தை தூண்டுவதாகவும் ஆய்வுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு தேசிய தணிக்கை அலுவலகத்தின் சுற்றுச் சூழல் தணிக்கைப் பிரிவு வெளியிட்ட அறிக்கையின் படி 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டில் பின்வருவனவற்றின் இறக்குமதி வீதமானது பொலிவினைல் குளோரைட்டு 21.19 வீதத்தாலும் பொலிஸ்டைரீன் 44.6 வீதத்தாலும் பொலிப்ரொப்லின் 39.24 வீதத்தாலும் மற்றும் பல்வேறு வகையான பிளாஸ்டிக்குகளின் இறக்குமதி 160.79 விதத்தாலும் அதிகரித்துள்ளமை தரவுகள் வாயிலாக அறிய முடிகின்றது.

மைக்ரோ பிளாஸ்டிக் மூலம் உடலுக்கு ஏற்படும் தீமையான விளைவுகளை பிரதானமாக இரு வகைப்படுத்துகின்றனர் துறை சார்ந்தோர். அவை பிளாஸ்டிக்கில் உள்ள பௌதீக இயல்புகளால் ஏற்படும் விளைவுகள் மற்றும் இரசாயன உள்ளடக்கங்களால் ஏற்படும் விளைவுகள் என்பனவாகும்.

பௌதீக இயல்புகள் எனப்படுவது அவ் அணுவின் பருமன், வடிவம் மற்றும் செரிவு என்பனவாகும். இரசாயன உள்ளடக்கம் எனப்படும் போது வெவ்வேறு பௌதீக இயல்புகளைப் பெறு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நுண் பிளாஸ்டிக் பாவனை...!

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதற்காகப் பாவிக்கப்படும் பொருள்கள் மற்றும் அப் பிளாஸ்டிக் அணு சுற்றாடலில் இருந்து உறிஞ்சிக் கொள்ளும் பொருள்கள் என்பன அடங்கும்.

பிளாஸ்டிக் உற்பத்தியில் அதன் நிறத்தைப் பெறுவதற்காக வெவ்வேறு வடிவங்களைப் பெறுவதற்காக வெவ்வேறு உறுதிகளைப் பெற வெப்ப உறுதிக்காக இலகுவில் தேவையான வடிவத்தைப் பெற்றுக் கொள்ள மற்றும் ஒட்சியேற்றம் அடையாமல் இருக்க, பல்வேறு இயல்புகளைப் பெற வெவ்வேறு இரசாயணப் பொருள்கள் சேர்க்கப்படுகின்றன.

குறிப்பாக இவ் இரசாயனப் பொருள்களில் புற்றுநோய் ஏற்படுத்தும் பாரமான உலோகங்களும் உள்ளன. எமது உடலில் வெவ்வேறு அளவில் உணவு, குடிநீர், வெவ்வேறு பானங்கள் மற்றும் சுவாசிக்கும் வளி மூலமாக நுண் பிளாஸ்டிக் உள்ளெடுக்கப்படுகின்றன.

இவ்வாறு மனித உடம்பினுள் பிளாஸ்டிக் மூலம் இரசாயன பொருள்களின் கலவையொன்று உட்செல்லும்.

இவ்வகை விசத்தன்மை கொண்ட இரசாயனங்கள் மூலம் ஒரு தனி இழையம் இழையக் கூட்டம் உருவாகும். இதனால் முழுமையான அங்கம் அல்லது முழு உடம்பும் பாதிப்படையலாம். இதில் மிகவும் பாதிப்பான விடயம் என்னவென்றால் இவை மனித உடம்பில் நிறமூர்த்தம் விகாரம் அடைவதுடன் புற்றுநோய் வரை இந்நிரமூர்த்த விகாரம் தீவிரமடையலாம்.

இவ்வாறான விச இரசாயனங்கள் உணவுச் சங்கிலியில் உயர் உயர இணைப்புக்களை நோக்கி பயணிக்கும் போது அவை ஒன்று சேரலாம்.

எனவே புற்று நோய்க்கு மேலதிகமாக உயர் செறிமான இரசாயனங்கள் மனிதனின் நீர்பீடனத் தொகுதியில் பாரிய பாதிப்பை ஏற்படுத்துவதோடு இனப்பெருக்கம் சார்ந்த பிரச்சினைகளும் ஏற்படுவதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. மேலும் இவ்விரசாயனங்கள் மூலம் அதிகளவில் சிறுநீரகம், இதயம், இனப்பெருக்க தொகுதி, மூளை மற்றும் சுவாசப்பாதை ஆகியன பாதிக்கப்படுகின்றன.

குறிப்பாகப் பிளாஸ்டிக் உற்பத்தியில் பிஸ்பினோல் எனும் இரசாயனம் பிரதானமாக அமைகின்றது. இது மனித உடலுக்குப் பிரதானமாக பாதிப்பை ஏற்படுத்துகின்றது. மேலும் இச்சேர்மானங்கள் மனித உடல் வளர்ச்சி அதிகரிப்பதுடன் அதற்குறிய அங்கங்களுக்குத் துலங்கல் ஏற்படுவதை குறைவடையச் செய்யும். பிஸ்பினோல் பல்காபனேற்று தகடுகள் மற்றும் உணவு பொதியிடப் பயன்படுத்தும் பிளாஸ்டிக் உற்பத்திக்குப் பயன்படும். பி.பி.ஏ. பயன்படுத்தி உற்பத்தி செய்யும் பிளாஸ்டிக் வெப்பத்தைக் கொடுப்பதோடு உறுதியையும் அதிகமாக்கும். இக்காரணத்தால் பி.பி.ஏ. பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பிளாஸ்டிக் உணவு களஞ்சியப் படுத்தவும் நுண்ணலை அடுப்பில் பயன்படுத்தப்படும் பாத்திரங்கள் உற்பத்திக்கும் பயன்படும்.

இந்த பி.பி.ஏ. உடல் பருமன் அதிகரிப்பு, இருதய நோய்கள், இனப் பெருக்கம் சார்ந்த நோய்கள், கருப்பைப் புற்றுநோய்கள் என்பன ஏற்படுவதாக ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

மைக்ரோ பிளாஸ்டிக்கின் தாக்கம் சூல் வித்தகத்தினூடாகக் கருவுக்கு கடத்தப்படுவதாக விஞ்ஞானிகளால் ஆய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது சார்ந்த விடயங்கள் சுற்றாடல் விஞ்ஞானம் மற்றும் ஆரோக்கியம் சார்ந்த விடயங்களைக் கையாளும் மிகவும் புகழ்பெற்ற விஞ்ஞான ஆய்விதழான சுற்றாடல் சர்வதேசம் என்ற இதழில் 2021 இல் தொகுதி 146 இல் வெளியிடப்பட்டது.

விஞ்ஞானிகள் மொத்தமாக ஆய்வுக்குப் பயன்படுத்திய 6 சூல் வித்தகங்களில் 4 சூல்வித்தகங்களில் 12 பிளாஸ்டிக் பகுதிகள் காணப்படுவதைக் கண்டுபிடித்தனர். இப் 12 பகுதிகளில் 5 பகுதிகள் சிசுவின் பகுதியிலும் 4 பகுதிகள் தாயிலும் 3 பகுதிகள் கோரியோ-அம்னியன் மென்சவ்விலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நுண் பிளாஸ்டிக்கின் தாக்கம் பற்றி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ரயீஸ் அவர்களிடம் கலந்துரையாடப்பட்ட போது, "எமது உணவுப் பழக்க வழக்கத்துடன் பிளாஸ்டிக் கலப்பு இன்று அதிகரித்துள்ள சூழலில் இதன் மூலம் பல்வேறு நோய்களான மூட்டுவருத்தம், மலட்டுத் தன்மை, முடிகொட்டுதல், செரிமானப் பிரச்சினைகள் மற்றும் புற்றுநோய்கள் போன்ற பல நோய்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக இன்று சிறியவர் பெரியோர் என அனைவரும் விரும்பி உண்ணக்கூடிய இடியப்பம் போன்ற உணவுப் பண்டங்களில் நுண் பிளாஸ்டிக்கினுடைய தாக்கம் அதிகரித்துள்ளது. இடியப்பம் அவிக்கக் கூடிய பிளாஸ்டிக் தட்டை உயர்வெப்ப நிலையில் அவிக்கும் போது உயர் கொதி நிலையின் வெப்பம் காரணமாக அதிலுள்ள இரசாயனங்கள் இடியப்பங்களுடன் கலந்து நோய் நிலையை ஏற்படுத்தும். இதற்கு மாற்றீடாக இயற்கையாக உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மூலம் உணவு தயாரிப்பது சிறந்தது.

குறிப்பாக இடியப்பங்கள் அவிப்பதற்காக பனையோலைத் தட்டுக்களை அறிமுகப்படுத்துவது சிறந்தது. அந்த வகையில் நிந்தவூர் பிரதேசத்தில் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது." என்றார்.

நுண் பிளாஸ்டிக்கின் தாக்கத்தைத் தடுப்பதென்றால் முடியுமான எல்லா வழிகளிலும் பிளாஸ்டிக் பாவனையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். மீள் பாவனை (புதிய கொள்வனவுகளைக் குறைத்தல்) மீள்சுழற்சி, யோகட், பால் வாங்கும் போது அவற்றை வீட்டுக்கு எடுத்துவரும் பட்சத்தில் பிளாஸ்டிக் கரண்டி, ஸ்ரோ கேட்காமல் வீட்டில் வைத்திருக்கும் கரண்டி, கோப்பைகள் உபயோகிக்கலாம்.

வாங்குவதற்கு முன் அல்லது பயன்படுத்துவதற்கு முன் இருமுறை சிந்தியுங்கள். புதிதாக வடிவமைக்கப்பட்ட பிளாஸ்டிக்குகளுக்கான மாற்றீடுகள், பொது இடங்களில் காணும் பிளாஸ்டிக்குகளை தாமே முன் வந்து அகற்றுதல் மற்றும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படல் போன்ற நடைமுறைகள் இவற்றின் பாவனைகளைக் குறைக்க உதவும்.

சுற்றாடல் அமைச்சு மற்றும் இலங்கை வைத்திய சங்கத்தின் வெளியீடு 2021 இல் நுண் பிளாஸ்டிக்கும் நீங்களும் எனும் நூலில் இந்த விடயம் வெளியிடப்பட்டுள்ளது.

**சதாம் ஹம்தா,**
இரண்டாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

# விருது வழங்கிக் கௌரவிப்பு

**(அஸ்ஹர் ஆதம்)**

புத்த சாசன சமய விவகார அமைச்சின் அனுசரணையுடன் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அகில இலங்கை ரீதியாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் கலைஞர்களுக்கான விருது வழங்கும் விழாவில் சாய்ந்தமருதைச் சேர்ந்த ஏ.இஸ்ஸதீன் கலாபூஷண அரச விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந் நிகழ்வு மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைபெற்றது.

# CSSL விருதைப் பெற்றுள்ளார் சப்ரகமுவ பீடாதிபதி வசந்தப்பிரியன்




இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக கணினிப் பீடத்தின் முதலாவது பீடாதிபதியாகப் பணியாற்றும் பேராசிரியர் ச. வசந்தப்பிரியன் CSSL தகவல் தொடர்பாடல் கல்வியாளர் 2022 விருதைப் பெற்றுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விருதை வழங்கிக் கௌரவித்துள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி சங்கிரிலா விடுதியில் இடம்பெற்ற நிகழ்வில் இந்த விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இலங்கையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவையும் தகவல் மற்றும் தொடர்பாடல் கல்வியின் வளர்ச்சியையும் வழங்குவதில் குறிப்பிடத்தக்க தேசிய பங்களிப்புகளை அங்கீகரிப்பதற்காக இந்த விருது பேராசிரியர் ச. வசந்தப்பிரியனுக்கு வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் – சுன்னாகத்தை பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் ச. வசந்தப்பிரியன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 97ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவில் கல்வி கற்றவர். இவர் தனது கலாநிதிப் பட்டத்தை சீனாவின் வுஹான் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்திலும், முதுகலை அறிவியல் பட்டத்தை எய்ந்தோவன் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திலும் கணினி விஞ்ஞானத்தில் இளமாணி சிறப்புப் பட்டத்தை பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் பெற்றார்.

2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதல் இலங்கை சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றிவரும் பேராசிரியர் ச. வசந்தப்பிரியன், இளம் வயதில் கணினிப் பேராசியராக உயர்வடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதியின் பார்வையின் கீழ் வருகின்றது சுற்றாடல் அமைச்சு

சுற்றாடல் அமைச்சு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிரடி தீர்மானம் ஒன்றை அறிவித்துள்ளார்.

சுற்றாடல் அமைச்சைத் தனது மேற்பார்வையின் கீழ் கொண்டு வருவதாக அவர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இந்த அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் கலந்தாலோசனை நடத்தி இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசமைப்பின் 44 (3) சரத்தின் அடிப்படையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சுற்றாடல் அமைச்சராக கடமையாற்றி வந்த நஸீர் அஹமட் நாடாளுமன்ற உறுப்புரிமையை இழந்திருந்தார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியால் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் நஸீர் அஹமட் பதவி இழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## டெங்கு நோயாளர்களது எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டில் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த இரண்டு நாள்களில் கணிசமான அளவில் அதிகரித்துள்ளது என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அண்மைக் காலமாக பெய்துவரும் மழை காரணமாக, குறிப்பாக நாட்டின் தென்மேற்குப் பகுதியில், அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் அதிகளவு டெங்கு அபாய வலயங்கள் காணப்படுகின்றன என்று டெங்குக் கட்டுப்பாட்டு பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி, பிலியந்தலை, மொரட்டுவ, களனி, தொம்பே, ராகம, அத்தனகல்ல, கம்பளை, உடுநுவர, குண்டசாலை, மாத்தளை மற்றும் பதுளை ஆகிய பிரதேசங்கள் டெங்கு அபாய வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

ஒருவருக்கு இரண்டு நாள்களுக்கு மேல் காய்ச்சல் இருப்பின் அது டெங்கு என்று சந்தேகிக்கப்படுவதுடன் வைத்திய உதவியை நாட வேண்டும் என மருத்துவ நிபுணர்கள் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இஸ்ரேல் மீதான ஹமாஸின் தாக்குதலில் அமெரிக்கர்கள் 22 பேர் உயிரிழப்பு!





இஸ்ரேல் மீதான ஹமாஸின் தாக்குதலில் 22 அமெரிக்கர்கள் உயிரிழந்துள்ளனர். 17 பேரை காணவில்லை என்றும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனத்தின் காசா நகரில் ஆதிக்கம் செலுத்தும் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது கடந்த 7 ஆம் திகதி தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியாக காசா மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதலைத் தொடங்கியது. கடந்த 6 நாட்களாக ஹமாஸ் அமைப்புக்கும் இஸ்ரேல் இராணுவத்துக்கும் இடையே போர் நீடித்து வருகிறது.

தாக்குதல் தொடங்கிய முதல் நாளில் ஹமாஸ் அமைப்பினர் நூற்றுக்கணக்கான இஸ்ரேல் மக்களை பணயக் கைதியாக பிடித்துச் சென்றனர். இஸ்ரேல் இராணுவம் வீசும் ஒவ்வொரு குண்டுக்கும் ஒருபிணைக் கைதியைக் கொல்வோம் என அவர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

பிணைக்கைதியாக பிடிக்கப்பட்டவர்களில் அமெரிக்கர்களும் உள்ளனர். இந்த நிலையில் பணயக் கைதியாக தடுத்துவைக்கப்பட்டுள்ள அமெரிக்கர்களை மீட்கும் பணியில் அமெரிக்க அரசு தீவிரம் காட்டி வருகிறது.

இது குறித்து அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் கூறுகையில்,

இஸ்ரேல் மீதான ஹமாஸின் தாக்குதலில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். 17 பேரை காணவில்லை. இந்த எண்ணிக்கை வரும் நாட்களில் அதிகரிக்கக்கூடும். ஹமாஸ் அமைப்பினர் அமெரிக்கர்களையும் பணயக் கைதியாக வைத்துள்ளனர். அவர்களை மீட்பது குறித்து இஸ்ரேலுடன் அமெரிக்க அரசு தொடர்ந்து பேசி வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

காசா மீதான தாக்குதலுக்கு தேவையான இராணுவ உதவியை இஸ்ரேலுக்கு அமெரிக்கா வழங்கி வருகிறது.

இந்தப் போரில் இஸ்ரேல் தரப்பில் இது வரையில் 1,200 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

3 ஆயிரம் பேர் படுகாயம் அடைந்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது. அதேபோல் பாலஸ்தீனத்தில் 1,300 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 6 ஆயிரம் பேர் படுகாயம் அடைந்துள்ளனர் என கூறப்படுகிறது.

# பாலஸ்தீனத்துக்கு எதிரான போர் குற்றங்களை முடிவுக்கு கொண்டுவர வேண்டும்!



## ஈரான் ஜனாதிபதி, சவுதி இளவரசர் ஆலோசனை

பாலஸ்தீனத்துக்கு எதிரான போர் குற்றங்களை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என ஈரான் ஜனாதிபதி இப்ராகிம் ரைசி, சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் ஆகியோர் நேற்று ஆலோசனை நடத்தினர்.

வான் தாக்குதலுக்கு பயந்து காசா நகரில் உள்ள மக்கள் தங்கள் உடமைகளுடன் , ஐ.நா. பாடசாலைகள் உட்பட பாதுகாப்பான இடங்களை நோக்கி செல்கின்றனர்.

வெதுப்பகங்கள் மற்றும் பலசரக்கு கடைகளில் மக்கள் கூட்டம் அலைபோதுகிறது. வெதுப்பகங்களில் எரிபொருள் மற்றும் மின்சாரம் இல்லாததால், அவைகள் திறந்த சில மணி நேரங்களிலேயே மூடப்படுகின்றன. காசா பகுதிக்குள் உணவு, தண்ணீர், எரிபொருள், மருந்துகள் விநியோகத்தை இஸ்ரேல் நிறுத்தி விட்டது. காசா நகரில் இருந்த ஒரே மின் நிலையமும், எரிபொருள் இன்றி மூடப்பட்டுவிட்டது. இதனால காசா நகர் இருள் சூழ்ந்து காணப்படுகிறது. மின் பற்றாக்குறை மருத்துவமனைகளின் செயல்பாட்டை முடக்கும் என செஞ்சிலுவை சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையில் ஈரான் ஜனாதிபதி இப்ராகிம் ரைசி மற்றும் சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் ஆகியோர் நேற்று இஸ்ரேல்-பாலஸ்தீன விவகாரம் குறித்து தொலைபேசியில் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

ஈரான், சவுதி இடையே கடந்த 7 ஆண்டுகளாக விரோதம் நிலவிவந்தது. இதை போக்கி மீண்டும் உறவுகள் ஏற்பட சீனா முயற்சி மேற்கொண்டது. இதையடுத்து மீண்டும் நல்லுறவை ஏற்படுத்த சவுதி அரேபியா, ஈரான் ஆகியவை கடந்த மார்ச் மாதம் ஒப்புக் கொண்டன. இந்த நிலையில் நேற்று இரு நாட்டு தலைவர்களும் முதல் முறையாக தொலைபேசியில் பேசினர். அப்போது பாலஸ்தீனத்துக்கு எதிரான போர் குற்றங்களை முடிவுக்கு கொண்டு வரவேண்டிய அவசியம் குறித்து இருவரும் ஆலோசித்தனர்.

இஸ்ரேலின் தாக்குதலை தடுத்து நிறுத்துவது தொடர்பாக சர்வதேச நாடுகளுடன் பேசுவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுப்பதாக சவுதி இளவரசர் தெரிவித்தார். அப்பாவி மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதலை சவுதி அரேபியா நிராகரிக்கிறது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# ‘ஒபரேஷன் அஜய்’ திட்டத்தின் மூலம் இஸ்ரேலில் இருந்து 212 பேர் டில்லி திரும்பினர்







‘ஒபரேஷன் அஜய்’ திட்டத்தின் மூலம் இஸ்ரேலில் இருந்து இந்தியாவின் தலைநகருக்கு வந்த முதல் விமானத்தில் 212 பேர் தாயகம் திரும்பியுள்ளனர்.

நேற்று இரவு ஜெருசேலத்தில் இருந்து ஏ.ஐ. 1140 விமானம் இந்தியா புறப்பட்டது. இதில் இந்தியா திரும்ப விரும்பிய மக்கள் அழைத்து வரப் பட்டனர். தாயகம் திரும்பியவர்களை மத்திய அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் வரவேற்றார்.

பாலஸ்தீனத்தின் காசா முனை பகுதியில் உள்ள ஹமாஸ் போராளி குழுக்கள் கடந்த 7 ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்து திடீர் தாக்குதலில் ஈடுபட்டனர். இதில், நூற்றுக்கணக்கான இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர்.

இதையடுத்து, ஹமாஸ‘க்கு எதிராக போர் தொடங்கியது என இஸ்ரேல் அறிவித்தது. காசாவில் ஹமாஸ் தீவிரவா திகளின் நிலைகளை குறிவைத்து வான்வழியாக கடுமையான தாக்குதலை இஸ்ரேல் மேற்கொண்டு வருகிறது. பெரும் பாலான கட்டடங்கள் தரைமட்டமானதில்ஆயிரக்கணக்கானோர் உயிரிழந் துள்ளனர்.

இருதரப்புக்கும் இடையில் மோதல் வலுத்து வருவதால், இஸ்ரேலில் உள்ள 18 ஆயிரம் இந்தியர்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, அங்கு உள்ளவர்களை பத்திரமாக மீட்கும் பணியில் மத்திய அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதற்காக ‘ஒபரேஷன் அஜய்’ என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் நேற்று இஸ் ரேலில் இருந்து புறப்பட்ட ஏர் இந்தியா விமானத்தில் 212 பேர் தாயகம் திரும்பியுள்ளனர்.

தொடர்ந்து இஸ்ரேலில் இருந்து மக்கள் இந்த திட்டத்தின் மூலம் இந்தியா திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படு கிறது.

# பீகாரில் இடம்பெற்ற ரயில் விபத்தில் நால்வர் உயிரிழப்பு; 70 பேர் காயம்!



பீகாரில் உள்ள ரகுநாத்பூர் ரயில் நிலையத்தின் அருகே ரயில் ஒன்று தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

23 பெட்டிகளை கொண்ட இந்த ரயில் டில்லி ஆனந்த் விஹார் ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டது.

இந்த நிலையில் பிஹாரின் பக்சார் மாவட்டம், ரகுநாத்பூர் ரயில் நிலையம் அருகே நேற்று முன்தினம் இரவு 9.53 மணியளவில் தடம்புரண்டு விபத்துக் குள்ளானது. இதில் 2 சொகுசு பெட்டிகள் உட்பட 6 பெட்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதி தண்டவாளத்துக்கு வெளியே விழுந்தன. மேலும் பல பெட்டிகள் தடம் புரண்டன.

விபத்தின் ஓசை மற்றும் பயணி களின் அலறல் கேட்டு உள்ளூர் மக்கள் அங்கு ஓடி வந்தனர். ரயில்வே மற்றும் மாநில பொலிஸாரும் அங்கு விரைந்து வந்து மீட்புப் பணியில் இணைந்து கொண்டனர். இந்த விபத்தில் 4 பயணிகள் உயிரிழந்தனர். சுமார் 70 பேர் காயம் அடைந்தனர். இவர்கள் உள்ளூர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.